புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com




ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • ஜுன் 26, 2025 • புரட்சி 25 • முழக்கம் 27 • விலை ரூ.6.00


# நுழைவுத் தேர்வுகளின் தோல்வி!

மாணவர் தகுதியை நிர்ணயிக்கும் நுழைவுத்தேர்வு முறைகள் தோல்வி அடைந்து வருகின்றன. மாணவர் அனைவரும் ஒரே தேர்வை எழுத வேண்டி இருப்பதால், இத்தகைய நுழைவுத் தேர்வு முறையின் வழியாக, எவ்விதக் குளறுபடிகளும் இல்லாத, நியாயமான மாணவர் சேர்க்கை நடைபெறும் என்று பரவலாக நம்பப்படுகிறது. இந்தியாவில், நுழைவுத் தேர்வுகள் சட்டபூர்வமானதும், மக்களின் நம்பிக்கைக்கு உரிய ஒன்றாகவும் கருதப்படுகிறது. உண்மையில், கவனமாக ஆய்வுசெய்து பார்த்தோமேயானால், நுழைவுத் தேர்வு முறை குறித்த கூற்றுகளும் நம்பிக்கைகளும் கேள்விக்கு உரியவையாக ஆகிவிடுகின்றன.

மகாராஷ்டிரத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, வீட்டுவசதி மேம்பாட்டுக் குழுமத்தில் ஆள்சேர்க்கைக்கான தேர்வு நடைபெற்றபோது, தேர்வுக்கு முன்னதாகவே வினாத்தாள்கள் வெளியாகிவிட்டன. மத்தியப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற வியாபம் ஊழல் நாட்டையே உலுக்கியது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுவந்த வியாபம் தேர்வு முறைகேடு களில் அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாணவர்கள், இடைத்தரகர்கள் ஈடுபட்டு இருந்தது அம்பலமாகியது. எண்ணற்ற மர்ம மரணங்களையும் நாம் கேள்வியுற்றோம். நீட் நுழைவுத் தேர்வு குறித்த சர்ச்சைகளுக்குப் பஞ்சமில்லை என்றே சொல்லலாம். நீட் குளறுபடிகள், முறைகேடுகள், சிபிஐ விசாரணையில் தொடங்கி உச்ச நீதிமன்றம், நரடாளுமன்றம் வரை பேசுபொருளாகின.

இந்தியா சீனா, என்று அநேகமாக அனைத்து நாடுகளிலும் நுழைவுத் தேர்வுகள் ‘தெரிவுவிடை வினா’ தெரிவுவிடை (Multiple Choice Questions) தேர்வுகளாகவே நடத்தப்படுகின்றன. இந்த வகைப்பட்ட தேர்வுகள் மூலமாக (Subjective Knowledge) மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்பு அறவே இல்லை என்பதுதான் அறிவியல் பூர்வமான உண்மை. இது போன்ற இயந்திரத்தனமான தேர்வுகள், மாணவர்களிடையே ‘கண்மூடித்தனமான மனப்பாடம்’ (Mindless Memorization) செய்யும் பழக்கத்தையும், தகவல்களைச் சேகரித்து நினைவில் இருத்திக் கொள்ளும் ஆற்றலையும் மட்டுமே உற்பத்தி செய்பவையாக உள்ளன. குறைபாடுகள் நிறைந்த இந்த நுழைவுத் தேர்வு முறை மூலம் மாணவர்களின் எதிர்காலம் பாதிப்புக்கு உள்ளாவதாகப் பல கல்வியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நுழைவுத் தேர்வுகள் ஏற்படுத்தும் தாக்கங்கள் நுழைவுத் தேர்வுகள் உடல்ரீதியிலான பிரச்சினைகள் தொடங்கி உளவியல் பிரச்சினைகள் வரை மாணவர்களைப் பல்வேறு வகையில் பாதிப்புக்கு உள்ளாக்கி வருகின்றன. வாழ்க்கை மீதான மாணவர்களின் நம்பிக்கையை உடைத்தெறிந்து, தற்கொலையின் விளிம்புக்கு அவர்களைத் தள்ளுகின்றன. அவர்களின் பெற்றோர் களும் கடுமையான மன உளைச்சலுக்கு இரையாகிறார்கள். நகரப் பகுதிகளில் வாழ்ந்து வரும், சமூகப் பொருளாதாரரீதியில் பின்தங்கி உள்ள மாணவர்கள், ஊரகப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மாணவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துவருகிறார்கள்.

நுழைவுத் தேர்வு முறையின் விளைவாக எண்ணற்ற தனியார் பயிற்சி மையங்கள் ஆங்காங்கே புற்றீசல் போலத் தோன்றி உள்ளன. இந்தியாவில், தனியார் பயிற்சி மையங்கள் ஒரு பிரத்யேகமான தொழில் துறையாகவே விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. இந்தத் துறையின் மதிப்பு, தற்போதைய நிலவரப்படி ஏறத்தாழ 58,000 கோடி ரூபாய் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய பயிற்சி மையங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களைப் போல் இயங்குகின்றன. பெரும் பணக்காரர்கள், உயர் மத்திய தரக் குடும்பத்து மாணவர்கள் மட்டுமே இந்த நிறுவனங்களில் சேர்ந்து பயிற்சி பெற முடிகிறது. பணக்காரர்கள், ஏழைகள் என்னும் பிளவு இங்கே மேலும் வலுப்பெறுகிறது. இத்தகைய பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாகக் கல்வி கற்பதற்கான வாய்ப்பிலும் சமத்துவமின்மை ஏற்படுகிறது.

ஒரே நாடு, ஒரே தேர்வு என்ற கருத்தாக்கத்தை தேசிய கல்விக் கொள்கை 2020 முன்னிறுத்துகிறது. மையப்படுத்தப்பட்ட (Centralised Examination) என்பது இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி முறைமையில் அதிர்வலைகளை உண்டாக்குகிறது. மொழிவழி மாநிலங்கள் உருவாக்கப் பட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும், தேவைக் கேற்பக் கல்விக் கொள்கைகளும் பாடத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இது போன்றதொரு சூழலில், மையப்படுத்தப்பட்ட தேர்வு முறை நடைமுறைப்படுத்தப்பட்டால், பெரும் சமூக-அரசியல் பின்னடைவு ஏற்படவே அதிக வாய்ப்பு இருக்கிறது.

கல்வி வணிகமயமாவதை அரசுகள் கட்டுப்படுத்த வேண்டும். அரசாங்கக் கல்விக் கட்டமைப்புகள் பலப்படுத்தப்பட வேண்டும். வாய்ப்புகளை மறுப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் கல்விமுறை, நுழைவுத் தேர்வுகள் குறித்துப் பொது விவாதங்கள் நடைபெற வேண்டும். ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை ஏழை, எளிய மக்களுக்கும் உரிய வாய்ப்புகள் கிடைப்பதை உத்தரவாதப்படுத்தும் முற்போக்கான, சமத்துவம் நிறைந்த கல்விக் கொள்கை, திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**– அருண் அசோகன், தமிழ் இந்து நாளேடு.**

## புண்படுகிறது என்ற கூக்குரலுக்கு உச்சநீதிமன்றம் முற்றுப்புள்ளி!

மத உணர்வைப் புண்படுத்துகிறார்கள் என்று எதற்கெடுத்தாலும் கூறிக்கொண்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதும் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதும் சங்கிகளின் வழக்கமாகிவிட்டது.

கமலஹாசனின் ‘தக் லைஃப்’ திரைப்படம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியைத் தரவில்லை என்றாலும் நீதிமன்றத்தின் வழியாக கருத்துரிமையை நிலைநாட்டி இருக்கிறது.

தமிழிலிருந்து தான் கன்னடம் பிறந்தது என்று கமலஹாசன் பேசியதற்காக கன்னடர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து, படத்தை கர்நாடகாவில் வெளியிடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். கர்நாடக உயர்நீதிமன்றம் இந்த பேச்சுக்காக கமலஹாசன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறியது.

இப்போது உச்ச நீதிமன்றம் எவரையும் மன்னிப்பு கேட்க வைக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்குக் கிடையாது, என்று கர்நாடக நீதிமன்றத்தின் தலையில்குட்டு வைத்திருக்கிறது. படத்தைத் திரையிடவும் உத்தரவிட்டுள்ளது. தணிக்கைக் குழு அனுமதித்ததற்குப் பிறகு ஒரு படத்தை திரையிட முடியாது என்று சட்டத்தை எவரும் கையில் எடுத்துக் கொள்ள முடியாது என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம் உணர்வுகளைப் புண்படுத்துகிறார்கள் என்று கூறி கருத்துரிமை பறிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் திட்டவட்டமாக அறிவித்து இருக்கிறது.

***"In india...there will never be an end to the hurt sentiment phenomenon. But for that, right to free speech cannot be jeopardised"***

இது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. "உணர்வுகளைப் புண்படுத்துவது என்ற கூற்றுக்கு முடிவே கிடையாது எதற்கு வேண்டுமானாலும் அதை கூறிக் கொண்டிருக்கலாம் அதற்காக கருத்து உரிமையை முடக்கி விடக்கூடாது".

மூன்று மாதங்களுக்கு முன்பு வேறு ஒரு வழக்கில் இதே உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக மற்றொரு கருத்தையும் வெளியிட்டது. "எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் ஒருகருத்தை விரும்பாவிடினும் அந்த கருத்தை மதிக்கவேண்டும்; கருத்துரிமையைக் காப்பாற்ற வேண்டும்"

***"Even if a large number of persons dislike the views expressed by another,the right of person to express the views must be respected and protected" (Pratapgarhi case)***

மதஉணர்வு புண்படுகிறது என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு பல நீதிமன்றங்கள் வழங்கிய தவறான தீர்ப்புகளுக்கு உச்சநீதிமன்றம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது!

நேற்று முன் தினம் கூட விடுதலை சிறுத்தைகள்கட்சித் தலைவர் திருமாவளவன் நெற்றியில் இட்ட விபூதியை அழித்துக் கொண்டார் என்றும் இந்துக்களை புண்படுத்தி விட்டார் என்றும் காவல் நிலையத்தில் சங்கிகள் புகார் கொடுத்து இருக்கிறார்கள். இந்த அர்த்தமற்ற வெற்று மிரட்டல்களுக்கு உச்ச நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது இது ஒரு Landmark Judjement.

## ஆங்கிலம் விலங்கல்ல; விலங்கை உடைக்கும் கருவி!

‘இந்தியாவில் ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் அவமானமாக உணர்வார்கள்’ என ஒன்றிய அமைச்சர் அமித் ஷா கூறிய கருத்து, இந்தியா முழுவதும் விமர்சனம் செய்யப்பட்டதுடன், கேலியாகவும் பார்க்கப்பட்டது. இப்போது அவரது கருத்து, அவருக்கு எதிராகவே திரும்பியுள்ளது. ஆங்கிலம் தொடர்பாக அமித் ஷாவின் கருத்தை விமர்சித்துள்ள காங்கிரஸ் கட்சி, பா.ஜ.க. முக்கிய தலைவர்களின் வாரிசுகள் பலரும் வெளிநாடுகளில் கல்வி கற்று வரும் பட்டியலை வெளியிட்டு விமர்சனம் செய்துள்ளது.

அமைச்சர் பியூஷ் கோயல் மகன் மற்றும் மகள் ஆகியோர் ஹார்வர்டு பல்கலையிலும், அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், நிர்மலா சீதாராமன் பிள்ளைகள் பாஸ்டன் பல்கலையிலும் படித்துள்ளனர். அமைச்சர்கள், சிவராஜ் சிங் சௌகான், ஜோதிராவ் சிந்தியா, ஹர்தீப் சிங் பூரி ஆகியோரின் பிள்ளைகள் மேற்கு நாடுகளில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் ஆங்கிலத்தில்தான் பயின்று வருகின்றனர். ராஜ்நாத்சிங், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் ஆகியோர் வெளிநாட்டில் படித்தவர்கள்தான். ஆங்கிலம் கற்பதற்கு வெட்கப்பட வேண்டும் எனக் கூறும் அமித் ஷா, அவர்கள் அமைச்சரவை சகாக்களைப் பார்த்து கூறட்டும் என்றும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

அமித் ஷாவின் கருத்தினை கிண்டல் செய்துள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி,

“ஆங்கிலம் என்பது அணை அல்ல; அது ஒரு பாலம், ஆங்கிலம் என்பது வெட்கக்கேடு அல்ல; அது ஒரு அதிகாரம். ஆங்கிலம் என்பது விலங்கல்ல; கைவிலங்கை உடைக்கும் கருவி” எனக் கூறியிருக்கிறார். தமிழ்நாடு அந்த கருத்தினை நூறாண்டுகளுக்கு முன்பே பற்றிக் கொண்டதுதான் அமித் ஷாக்களின் அச்சம்.

## பாராட்டத்தக்க முயற்சி!

### பெரியார் முழக்க வளர்ச்சிக்கு வாட்ஸ்அப் குழு

ஆசிரியர் சிவகாமி முன்னெடுப்பில் புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சிக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு ஒரு வருட செயல் திட்டமாக மாதம் 500 ரூபாய் நிதி பங்களிப்பு செய்வதாக தீர்மானித்து செயல்பட்டு வருகிறது. முதல் தவணையாக ஜூன் மாதம் ரூ.8000 வழங்கியள்ளனர். குழுவில் இணைந்து ஒரு வருடத்திற்கு வளர்ச்சி நிதி வழங்க விருப்பமுள்ள தோழர்கள் தகவல் தெரிவிக்குமாறு தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

### தலையங்கம்

## சமஸ்கிருத படை எடுப்பு

2014 ஆண்டிலிருந்து 2025 வரை சமஸ்கிருதத்துக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி 2,533 கோடி ரூபாய் என்ற தகவல் வெளிவந்துள்ளது. அதாவது ஆண்டுக்கு சராசரியாக 230 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தமிழ் உள்ளிட்ட ஐந்து செம்மொழிகளுக்கும் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டது வெறும் 13 கோடி ரூபாய் மட்டுமே. சமஸ்கிருதத்தை விட 22 மடங்கு தமிழுக்கு குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் உள்ளிட்ட ஐந்து செம்மொழிகளுக்கும் ஒதுக்கிய நிதியை விட 17 மடங்கு கூடுதலாக சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சமஸ்கிருதம் பேசும் மாநிலம் இல்லை. சமஸ்கிருதம் தெரிந்தவர்களாக பதிவு செய்தவர்கள் 24,821 பேர் தான். அவர்கள் கூட சமஸ்கிருதத்தில் உரையாடுவது இல்லை. சமஸ்கிருத மந்திரங்களை மனப்பாடம் செய்து வழிபாடுகளை நடத்தும் வேத பார்ப்பனர்கள் கூட வீடுகளில் சமஸ்கிருதம் பேசுவது இல்லை. கல்லூரிகளில் சமஸ்கிருதப் பட்டப்படிப்புகளுக்கு தொடர்பு மொழி சமஸ்கிருதம் அல்ல, ஆங்கில வழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. சமஸ்கிருதத்திற்கு தமிழைப் போல் தனி எழுத்து வடிவம் இல்லை. இந்தி உள்ளிட்ட பல வட இந்திய மொழிகளில் பயன்படுத்தப்படும் 'தேவ நாகரி' வரி வடிவமே பயன்படுத்தப்படுகிறது. சமஸ்கிருதத்தைப் போலவே பிராகிருதம் என்பதும் ஒரு வடமொழி தான். ஆனால் அது தமிழை ஊடுருவி சிதைக்கவில்லை.

அறிவைப் பகிர்ந்து கொள்ள மறுத்த 'பார்ப்பனியம்' சமஸ்கிருதத்தை தனது 'மூளையில்' மட்டும் ஏற்றி வைத்துக் கொண்டது. எழுத்துக்கள் ஆகிவிட்டால் 'சூத்திர, பஞ்சமர்கள்' படித்து விடுவார்கள் என்பதற்காகவே இந்த சூழ்ச்சி. இதற்காகவே வேதங்களுக்கு 'எழுதாக் கிளவி' என்று பெயர் சூட்டினார்கள்.

சமண பவுத்த மதங்கள் பிராகிருத மொழி வழியாக எழுத்து வடிவங்களோடு பரவத் தொடங்கிய பிறகு, எழுதாமல் போனால் சமஸ்கிருதம் அழிந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாக 'எழுதாக் கிளவியை' 'எழுதும் கிழவியாக' மாற்றிக் கொண்டார்கள்.

புத்தர் சமணர் பேசிய பிராகிருத மொழியை திருத்தி அமைத்துக் கொண்டதுதான் சமஸ்கிருதம். சொல்லப்போனால் வேதங்களிலேயே சமஸ்கிருதம் என்ற சொல் கிடையாது. வேதத்தில் 'சந்தஸ' என்றுதான் குறிப்பிடப்படுகிறது.

ஆதிக்க அதிகாரக் குறியீடான சமஸ்கிருத மொழியில் பேசச் சொன்ன போது அதில் பேச முடியாது என்று மறுத்தவர் புத்தர்.

சமஸ்கிருதம் என்ற சொல் ஒரு மொழியாக முதலில் ராமாயணத்தில் தான் குறிப்பிடப்படுகிறது என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். சாகுந்தலம் என்ற காளிதாசர் எழுதிய சமஸ்கிருத நாடகத்தில் அரசர்களாகவும், வேத பண்டிதர்களாகவும் நடிப்போர் மட்டுமே சமஸ்கிருதத்தில் வசனம் பேசுவார்கள். பெண்கள் மற்றும் பொதுமக்கள் பிராகிருதத்தில் தான் பேசுவார்கள். பகவத்கீதையின் மனு சாஸ்திரமும் வால்மீகி ராமாயணமும் வர்ணாசிரமப் பாகுபாடுகளை வலியுறுத்துகின்றன.

இந்திய மொழிகளுக்கு எல்லாம் தாய் சமஸ்கிருதம் தான் என்று அமித் ஷா மொழி அறிஞர் போல பேசுகிறார். தமிழ்நாட்டில் இருந்து மட்டுமே எதிர்ப்புக் குரல் எழுந்தது. இதற்குக் காரணம் திராவிட உணர்வு தான்!

'இந்தியா' என்ற சொல்லே பார்ப்பனியத்துக்கு பகைச்சொல்! அவர்கள் பார்வையில் 'இந்தியா' என்பது 'பாரதியம்' முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் இணைத்துக் குறிக்கும் சொல் 'இந்தியா' என்பதால் அந்த சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்கிறார் ஆர்எஸ்எஸ் கொள்கை வகுப்பாளரான கோல்வாக்கர் இந்துக்களுக்கான நாடு 'பாரதியம்' என்று கூறுகிறார். அதனால் தான் பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட ஆர்.எஸ்.எஸ் அமைப்புகள் 'பாரதியம்' என்ற சொல்லையே பயன்படுத்தி வருகின்றனர்.

அண்மையில் சென்னை சமஸ்கிருத கல்லூரி விழாவில் பேசிய காஞ்சி மடத்தின் புதிய சங்கராச்சாரி மயிலாப்பூர் வேத பிராமணர்களின் அடையாளமாக இருக்கிறது என்று பேசியுள்ளார். மயிலாப்பூர் வீடுகளில் சமஸ்கிருதத்தில் பெயர்கள் இருக்கின்றன, வேதத்தோடும் ஆச்சாரத்தோடும் இங்கே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் தமிழ் முதல் மொழியாக இருந்தாலும் கூட மயிலாப்பூர் நம்முடைய சமஸ்கிருத, அடையாளத்தையும் ஆச்சாரத்தையும் காப்பாற்றி வருகிறது என்று பேசி உள்ளார். (இந்த நிகழ்வில் ஆடிட்டர் குருமூர்த்தி மேலாடை இன்றி பூநூல்மேனியுடன் அமர்ந்திருக்கிற காட்சி ஏடுகளில் வெளிவந்துள்ளன).

இந்தியா முழுமையும் மயிலாப்பூர் ஆக மாற்ற வேண்டும் என்பதே ஒன்றிய அரசின் நோக்கம். அதன் காரணமாகவே சமஸ்கிருதத்திற்கு மட்டும் கோடி கோடியாக பணத்தை வாரி இறைக்கிறார்கள், ராமராஜ்யம் நடத்துவதற்கு இவர்களுக்கு சமஸ்கிருதம் தேவைப்படுகிறது. ஆனால் இது ராமாயண காலமல்ல; சூத்திரர் சம்பூகன்கள் சுயமரியாதை வீரர்களாக களத்தில் நிற்கும் காலம் என்பதை வரலாறு உணர்த்தும்.

## 'முருகனை' அவமதிக்கும் சங் பரிவாரங்கள்

*முருகக் கடவுளை பாஜக தலைவராக மாற்றிவிட்டது மதுரை அரசியல் மாநாடு. இவர்களைவிட முருகனை அவமதிப்பவர்கள் வேறு யாருமே இருக்க முடியாது.*

*கர்ப்பக்கிரகத்தில் வேத மந்திரத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்டு சக்தி உடையவனாக அறிவிக்கப்பட்ட முருகனை இவர்கள் நம்பவில்லை. அதனால் தான் மதுரை மாநாட்டு திடலுக்கு இழுத்து வந்து அங்கே செட்டுகளைப் போட்டு கர்ப்பக்கிரக முருகனை விட 'செட்டுமுருகன்' தான் எங்களுக்கான தலைவன் என்று மதுரை மாநாடு அறிவித்திருக்கிறது.*

*உண்மையிலேயே இவர்களுக்கு முருக பக்தி இருந்திருக்கும் என்று சொன்னால் என்ன செய்திருக்க வேண்டும்? முருகன் கோவிலுக்குப் போய் இந்து விரோதிகளை சூரசம்காரம் செய்; திராவிடத்தை அழித்து ஒழிக்க வெளியே வா என்று டிக்கெட் வாங்கி அர்ச்சனை செய்திருக்க வேண்டும். ஆனால் முருகன் இதை எல்லாம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த மாட்டான் என்று நம்பிக்கை இழந்து தான் அரசியல் மேடைக்கு கடத்திவந்து கடவுளை குறியீடாக்கி விட்டனர்.*

*குறிஞ்சி நிலத் தலைவனாகக் கருதப்படும் முருகன் காலத்தில் இந்து மதம் என்ற ஒரு மதமே கிடையாது! அவனை எப்படி இந்து மதத்தில் இவர்கள் சேர்த்தார்கள்? இப்போது பாஜகவில் சேர்த்தது போல் தான் இந்த கதையும் நடந்து இருக்கிறது!*

*இந்துக்கள் ஒன்று சேர வேண்டும் என்று இவர்கள் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். இந்து சமூகத்தில் ஒற்றுமை இல்லை என்பதை இந்த நாட்டின் சட்டங்களே உறுதிப்படுத்துகின்றன.*

***அப்படி ஒற்றுமை இருந்திருக்கும் என்று சொன்னால் வன்கொடுமை தடுப்பு சட்டமும் இட ஒதுக்கீடு சட்டமும் தேவையே இல்லை, இந்து மதம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தவில்லை என்பதற்கு இந்த சட்டங்களே சாட்சி கூறுகின்றன.***

*இந்து எதிர்ப்பாளர்களுக்கு ஓட்டு போடக்கூடாது என்று மற்றொரு தீர்மானம் கூறுகிறது. அப்படியானால் அவர்களிடம் ஒரு கேள்வி இருக்கிறது, பாஜக பரிவார இந்துக்களாகிய நாங்கள் இந்து எதிர்ப்பாளர்களுக்கு வணிகம் செய்ய மாட்டோம்; மருத்துவம் பார்க்க மாட்டோம்; தொழில் செய்ய மாட்டோம்; கட்டுமானம் செய்ய மாட்டோம்; வட்டிக்கு கடன் தர மாட்டோம்; வேலைக்கு ஆட்களை நியமிக்க மாட்டோம் என்று தீர்மானம் போடுவார்களா?*

*இந்த அரசியல் காமெடியில் மாஜி அதிமுக அமைச்சர்களும் பங்கேற்று பெரியார், அண்ணா போன்ற தலைவர்கள் அவமதிக்கப்பட்ட திரைக் காட்சிகளைப் பார்த்து ரசித்திருக்கிறார்கள். சந்தி சிரிக்கிறது கூட்டணி தர்மம்!*

## சரஸ்வதி நாகரீகத்துக்கு ஆய்வறிக்கை உண்டா?...

*கீழடி அகழ்வாராய்ச்சி அறிக்கையை இரண்டு ஆண்டுகள் கிடப்பில் போட்டுவிட்டு பிறகு அந்த அறிக்கையை திருத்தி எழுதித் தருமாறு ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியது.*

*அதில் திருத்துவதற்கு எதுவும் இல்லை என்று ஆய்வாளர் மறுத்துவிட்டார். ஆய்வாளர் அமர்நாத் மீண்டும் நொய்டாவுக்கு இடமாற்றம் செய்து பழிவாங்கப்பட்டுளளார்.*

*இப்போது அந்த அறிக்கை போதுமானது அல்ல, மேலும் தகவல்கள் தேவைப்படுகிறது என்று ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் சேக்வாத் சென்னையில் பேட்டியளித்து இருக்கிறார்.*

*ஆய்வாளர் அமர்நாத் பாஜக விரும்புகிறபடி அறிக்கையை திருத்தி அனுப்பி இருந்தால் அதை வெளியிட்டு இருப்பார்கள். இப்போது ஆர்எஸ்எஸ் ரசாயன பரிசோதனை ஆலைக்கு அனுப்பி சோதனை செய்த பிறகு அதை அங்கீகரிப்பார்கள் போலும்.*

*வேதத்தில் கூறப்படும் சரஸ்வதி என்ற ஆறு எங்கே இருக்கிறது, என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவே இல்லை. இதைக் கண்டுபிடிப்பதற்காகவே பல கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கி இன்னமும் ஆண்டுகணக்கில் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.*

*தேடிக் கொண்டிருக்கின்ற ஒரு ஆற்றின் நாகரீகத்தை ஏற்கனவே நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் இதுதான் எங்கள் நாகரீகம்: சரஸ்வதி நாகரீகம் என்று கூறிவிட்டார். திருத்துவதற்கு அது பிஹெச்டி ஆய்வு அல்ல தொல்லியல் ஆய்வு.*

*இடிக்கப்பட்ட பாபர் மசூதியில் தான் ராமர் கோயில் இருந்தது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக் கூறி நம்பிக்கையின் அடிப்படையில் தான் கோயிலை கட்டுவதற்கு அனுமதி அளித்தது. இதற்கெல்லாம் அவர்களுக்கு ஆதாரம் தேவையில்லை.*

*ஆனால் 5 ஆயிரத்து 350 ஆண்டுகளுக்கு முன்பு மதம் இல்லாத ஒரு வாழ்க்கையை தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள், என்ற ஆய்வை உலக அறிவியல் ஆய்வுகள் ஏற்றுக் கொண்டாலும் வெளியிட மாட்டார்கள். அவர்களுக்கு அகழ்வாராய்ச்சி அறிக்கையை விட மேலும் ஆதாரங்கள் தேவைப்படுகிறது. பாஜக அணிக்குள் பதுங்கி நிற்கின்றவர்கள் இது பற்றி எல்லாம் வாய் திறக்க மாட்டார்கள்.*

*எடப்பாடியைக் கேட்டால் இவையெல்லாம் அறிஞர்களுடைய பிரச்சனை என்று ஒதுங்கிவிடுவார். தமிழ்நாடு பாஜகவோ நாங்கள் எல்லாம் "பாரதியர்கள்" ஆகிவிட்டோம்; தமிழர்கள் என்பது பிரிவினை மனப்பான்மை என்று தேசபக்தியுடன்பதில் சொல்லுவார்கள்.*

**- விடுதலை இராசேந்திரன்.**


## திருப்பூரில் ஆர்ப்பாட்டம்

*திருப்பூர் 21-06-2025 மாலை 5 மணி அளவில் வ.உ.சி திடல் (செங்காடு) அவினாசி பகுதியில் ஒன்றிய அரசே! கீழடி ஆய்வறிக்கையை உடனடியாக வெளியிடு எனக் கோரி திருப்பூர் மாவட்ட தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய கழகம் சார்பாக கையெழுத்து இயக்கம், மற்றும் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருப்பூர் திவிக சார்பாக மாவட்டச் செயலாளர் முகில்ராசு கண்டன உரையாற்றினார். நிகழ்வில் மாரிமுத்து மாநகர துணைத் தலைவர், கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

# ‘மனிதத்தை’ போற்றுவோரே கடவுள், மத மறுப்பாளர்கள்

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை(4)

**உலகப் புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியர் யுவால் நோவா ஹராரி. இஸ்ரேலில் பிறந்தவர் இப்ரு பல்கலைக்கழக பேராசிரியர். மனித குல வரலாறு, வருங்கால வரலாறு, என்று அவர் எழுதிய நூல்கள் உலகம் முழுதும் 2 கோடிக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளன. மூன்றாவதுதாக அவர் எழுதி உலக சாதனை படைத்துள்ள நூல் "21ஆம் நூற்றாண்டுக்கான 21 பாடங்கள்" - கடவுள் மதத்தை மறுக்கும் மதச்சார்பின்மை குறித்து அவர் எழுதியுள்ளதின் ஒரு பகுதி**



மதச்சார்பற்ற சித்தாந்தம் என்றால் என்ன? உண்மையிடத்தில்தான் மதச்சார் பின்மைவாதிகள் அர்ப்பணிப்புக் கொண்டுள்ளனர். தலையாய என்பது நேரடிக் கண்காணிப்பு மற்றும் சான்றுகளின் அடிப்படையில் அமைகிறதே அன்றி, விசுவாசத்தின் அடிப்படையில் அல்ல. மதச்சார்பின்மைவாதிகள் உண்மையை நம்பிக்கையோடு போட்டுக் குழப்பிக் கொள்வதில்லை. ஏதோ ஒரு கட்டுக்கதையில் மிக வலிமையான ஒரு நம்பிக்கை உங்களுக்கு மூளையில் உளவியலையும், உங்கள் குழந்தைப் பருவத்தையும், இருந்தால், உங்கள் கட்டமைப்பையும் சுவாரசியமான விஷயங் களை அது சொல்லக்கூடும், ஆனால் அக்கதை உங்கள் உண்மை என்பதை அது நிரூபிப்பதில்லை. (பல சமயங்களில், கதை உண்மையற்றதாக இருக்கும்போதுதான் வலிமையான நம்பிக்கைகள் தமக்குத் தேவைப்படுகின்றன.)

அதோடு கூடவே, மதச்சார்பின்மைவாதிகள் எந்தவொரு குழுவையோ, எந்தவொரு நபரையோ, அல்லது எந்தவொரு நூலையோ புனிதமானதாகக் கருதுவதில்லை, அது ஒன்றே உண்மையின் ஒட்டுமொத்த உருவம் என்றும் கருதுவதில்லை. மாறாக, உண்மை தன்னை எங்கு வெளிப்படுத்திக் கொண்டாலும், அது பண்டைய புதைபடிம எலும்புகளிலானாலும் சரி, அல்லது தொலைதூரத்தில் உள்ள விண்மீன் மண்டலங்களின் புகைப்படங்கள், புள்ளிவிபரத் தரவுகளின் அட்டவணைகள், அல்லது பல்வேறு மனிதப் பாரம்பரியங்களின் எழுத்துப் படைப்புகளிலானாலும் சரி, மதச்சார்பின்மைவாதிகள் அதைப் புனிதமானதாகக் கருதுகின்றனர். உண்மை குறித்த இந்த அர்ப்பணிப்புதான், அணுவைப் பிளப்பதற்கும், மரபணுத் தொகுதியைப் புரிந்து கொள்வதற்கும், உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிப் பாதையைக் கண்டறிவதற்கும், மனிதகுலத்தின் வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கும் நமக்கு உதவியுள்ள நவீன அறிவியலின் அடித்தளமாக விளங்குகிறது.

மதச்சார்பின்மைவாதிகள் மிகுந்த அர்ப்பணிப்புக் கொண்டுள்ள இன்னொரு விஷயம் மனிதநேயம். மதச்சார்பற்ற நெறிமுறைகள் ஏதோ ஒரு கடவுளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைச் சார்ந்திருப்பதில்லை, மாறாக, துன்பம் குறித்த ஓர் ஆழமான புரிதலையே அவை சார்ந்துள்ளன. எடுத்துக் காட்டாக, மதச்சார்பற்றவர்கள் கொலை செய்யாமல் இருப்பதற்குக் காரணம் ஏதோ பண்டைய நூல் அதற்குத் தடை விதித்துள்ளது என்பது அல்ல, மாறாக, அது உயிர் களுக்கு அளப்பரிய துன்பத்தைக் கொடுக்கிறது என்பதால்தான் அவர்கள் அதைச் செய்வதில்லை. கொலை செய்யக்கூடாது என்று தங்கள் ‘கடவுள் சொல்லியிருப்பதால்’ தாங்கள் அச்செயலைத் தவிர்ப்பதாகக் கூறுகின்ற மக்களிடம் ஏதோ பிரச்சனையும் ஆபத்தும் உள்ளன. அப்படிப்பட்ட மக்கள் மனிதநேயத்தைவிடக் கீழ்ப்படிதலால் தூண்டப்படுகின்றனர். மத அவநம்பிக்கையாளர்களையும் மந்திரவாதிகளையும் திருமணத்திற்குவெளியே தகாத உறவு கொள்பவர்களையும் அந்நியர்களையும் கொல்ல வேண்டும் என்று தங்கள் கடவுள் தங்களுக்குக் கட்டளையிடுவதாக அவர்கள் நம்பத் தொடங்கினால், அவர்கள் என்ன செய்வார்கள்?

**மதச்சார்பற்ற மக்கள் சுதந்திரத்தைப் போற்றுகின்றனர்; எது உண்மை என்பதையும் எது சரி என்பதையும் தீர்மானிப்பதற்கான உச்சகட்ட நீதிபதியாக இருப்பதற்கான அதிகாரத்தை எந்தவொரு நூலுக்கும், அமைப்புக்கும் அல்லது மதத் தலைவருக்கும் அவர்கள் கொடுப்பதில்லை.**

முழுமையான தெய்விகக் கட்டளைகள் இல்லாத நிலையில், மதச்சார்பற்ற நெறிமுறைகள் பல சமயங்களில் கடினமான, இக்கட்டான நிலையை எதிர்கொள்கின்றன. ஒரு செயல் ஒருவருக்கு வேதனை ஏற்படுத்துகின்ற அதே நேரத்தில் இன்னொருவருக்கு உதவினால் என்ன நிகழும்?ஏழைகளுக்கு உதவுவதற்காகப் பணக்காரர்களுக்கு மிக அதிகமான வரிகளை விதிப்பதும், ஒரு கொடுங்கோலனை அகற்றுவதற்காக ஒரு கொடூரமான போரைத் தொடுப்பதும், எண்ணற்ற அகதிகள் நம் நாட்டிற்குள் நுழைய அவர்களுக்கு அனுமதி கொடுப்பதும் நெறிமுறை சார்ந்த செயல்கள்தானா? மதச்சார்பற்ற மக்கள் இத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது, "கடவுளின் கட்டளை என்ன?" என்று அவர்கள் கேட்பதில்லை. மாறாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் உணர்வுகளையும் கவனமாகச் சீர்தூக்கிப் பார்த்து, பலதரப்பட்ட அவதானிப்புகளையும் சாத்தியக்கூறுகளையும் கூர்ந்து ஆய்வு செய்து, மிகக் குறைவான தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு நடுவழியை அவர்கள் தேடுகின்றனர்............

சிந்திப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் பரிசோதிப்பதற்குமான அவர்கள் உணர்ந்து கொள்கின்றனர். சுதந்திரம் இல்லாமல் உண்மையையும் துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான வழியையும் நம்மால் தேட முடியாது. மதச்சார்பற்ற மக்கள் சுதந்திரத்தைப் உண்மை என்பதையும் எது சரி என்பதையும் போற்றுகின்றனர்; எது உண்மை என தீர்மானிப்பதற்கான உச்சகட்ட நீதிபதியாக இருப்பதற்கான அதிகாரத்தை எந்தவொரு நூலுக்கும், அமைப்புக்கும் அல்லது தலைவருக்கும் அவர்கள் கொடுப்பதில்லை. சந்தேகிப்பதற்கும், மீண்டும் சரி பார்ப்பதற்கும். எந்தவொரு விஷயம் குறித்தும் ஓர் இரண்டாம் அபிப்பிராயத்தைக் கேட்பதற்கும், ஒரு வித்தியாசமான பாதையை முயன்று பார்ப்பதற்குமான சுதந்திரத்தை மக்கள் எப்போதும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். பூமி இப்பிரபஞ்சத்தின் மையத்தில் உண்மையிலேயே அசையாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறது என்ற கருத்துக்கு எதிராகக் கேள்வி கேட்கத் துணிந்த கலிலியோ கலிலியை மதச்சார்பற்ற மக்கள் போற்றுகின்றனர். 1789 ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் புரட்சியின்போது பஸ்தி கோட்டையினுள் புகுந்து பதினாறாம் லூயியின் கொடூரமான ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த பெருந்திரளான பொதுமக்களை அவர்கள் போற்றுகின்றனர். ஒரு பேருந்தில் வெள்ளையர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளில் ஒன்றின்மீது அமரத் துணிந்த ரோசா பார்க்ஸை அவர்கள் மெச்சுகின்றனர்.

பாரபட்சங்களையும் அடக்குமுறை ஆட்சி களையும் எதிர்ப்பதற்கு ஏராளமான துணிச்சல் தேவை, ஆனால் அறியாமையை ஒப்புக் கொள்வதற்கும் தெரியாத ஒன்றை முயன்று பார்ப்பதற்கும் அதைவிட அதிகத் துணிச்சல் தேவை. நமக்கு ஏதேனும் தெரியாவிட்டால், நம்முடைய அறியாமையை உணர்ந்து கொண்டு, புதிய சான்றுகளைத் தேடுவதற்கு நாம் ஒருபோதும் பயப்படக்கூடாது என்று மதச்சார்பற்றக் கல்வி நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. நமக்கு ஒரு விஷயம் தெரியும் என்று நாம் நினைத்தாலும்கூட, நம்முடைய அபிப்பிராயங்களை சந்தேகிக்கவும் நம்முடைய கருத்துகளை மீண்டும் சரி பார்த்துக் கொள்ளவும் நாம் பயப்படக்கூடாது. தெரியாதவற்றைக் குறித்துப் பலர் பயப்படுகின்றனர். ஒவ்வொரு கேள்விக்கும் திட்டவட்டமான விடைகளை அவர்கள் விரும்புகின்றனர். தெரியாத ஒன்றைக் குறித்த பயம், ஒரு கொடுங்கோலனைக் குறித்து நாம் கொண்டிருக்கும் பயத்தைவிட அதிகமாக நம்மை முடக்கிப் போட்டுவிடும். முழுமையான விடைகளை உள்ளடக்கிய ஒன்றின்மீது நாம் முழுமையாக விசுவாசம் கொண்டாலொழிய மனிதச் சமுதாயம் இடிந்து நொறுங்கிவிடும் என்று வரலாறு நெடுகிலும் மக்கள் கவலைப்பட்டனர். உண்மையில், அறியாமையை ஒப்புக் கொள்ளவும் கடினமான கேள்விகளைக் கேட்கவும் தயாராக இருக்கின்ற துணிச்சலான மக்களைக் கொண்ட ஒரு சமுதாயம் அதிகச் செழிப்பாக இருப்பதோடு மட்டுமல்லாமல், எந்தக் கேள்வியும் கேட்காமல் ஓர் ஒற்றை பதிலை வெறுமனே ஏற்றுக் கொள்கின்ற மக்களைக் கொண்ட சமுதாயங்களைவிட அதிக அமைதியாகவும் மதச்சார்பின்மை இருக் கின்றன என்பதை நவீன வரலாறு விளக்கிக் காட்டியுள்ளது. உலகத்தைப் பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்ப்பதற்குப் பழக்கப்பட்டுள்ள மக் களைவிட, தங்களுடைய உண்மையைத் தாங்கள் இழந்து விடுவோமோ என்று பயப்படுகின்ற மக்கள் அதிக வன்முறையாக நடந்து கொள்கின்றனர். வழக்கமாக, உங்களால் பதிலளிக்க முடியாத கேள்விகள், நீங்கள் எதிர்த்துக் கேள்வி கேட்சு முடியாத பதில்களைவிட அதிகச் சிறப்பானவையாக இருக்கின்றன.

இறுதியாக, மதச்சார்பற்ற மக்கள் பொறுப்பு ணர்வைக் கொண்டாடுகின்றனர். உலகைப் பாதுகாத்து, தீயவர்களைத் தண்டித்து, நியாய மானவர்களுக்கு வெகுமதி வழங்கி, வறட்சி, கொள்ளைநோய் மற்றும் போரிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்ற ஏதோ ஓர் உயர்ந்த சக்தியில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. நாம் செய்கின்ற மற்றும் செய்யாமல் போகின்ற ஒவ்வொரு காரியத்திற்கும், நிலையற்ற மனிதர்களாகிய நாம் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். உலகம் துயரத்தால் நிரம்பியிருந்தால், அதற்கான தீர்வுகளைக் கண்டுபிடிப்பது நம்முடைய கடமையாகும். கொள்ளைநோய்களை குணப்படுத்துவது, ஏழைகளுக்கு உணவு வழங்குவது, உலகின் பெரும் பகுதிகளுக்கு அமைதியைக் கொண்டு வருவது போன்ற நவீனச் சமுதாயங்களின் அளப்பரிய சாதனைகள் குறித்து மதச்சார்பற்ற மக்கள் பெருமிதம் கொள்கின்றனர். இச்சாதனைகளுக்கான பெருமையை எந்தவொரு தெய்விகக் காவலருக்கும் நாம் கொடுக்க வேண்டியதில்லை. மனிதர்கள் தங்களுடைய சொந்த அறிவையும் மனிதநேயத்தையும் வளர்த்துக் கொண்டதிலிருந்துதான் இச்சாதனைகள் விளைந்தன. ஆனால் இதே காரணங்களுக்காகத்தான், இனப் படுகொலையில் தொடங்கிச் சுற்றுச்சூழல் சீர்குலைவுவரை நவீனத்துவத்தின் அனைத்துக் குற்றங்களுக்கும் குறைகளுக்கும் நாம் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. அதிசயங்கள் நிகழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதற்கு பதிலாக, நம்மால் எந்த விதத்தில் உதவி செய்ய முடியும் என்று நாம் கேட்க வேண்டும். மதச்சார்பற்ற உலகின் முதன்மையான விழுமியங்கள் இவை....

Posted at Egmore RMS, Pathirika Channel,Chennai-08.
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# நில உரிமைக்குப் போராடிய ‘இடையாற்றுமங்கலம்’

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரை தொடரை முரசொலையில் ர.பிரகாஷ் எழுதி வருகிறார். லால்குடி இடையாற்று மங்கலத்தில் பெரியார் தொண்டர்கள் பண்ணை ஆதிக்கத்தை எதிர்த்த சுருக்கமான வரலாறு.**

‘முதலில் ஒழிக்கப்பட வேண்டியது, ‘வர்க்க வேறுபாடா‘, ‘சாதி வேறுபாடா’ என்பதில் தந்தை பெரியாருக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையில் கருத்து மாறுபாடு இருந்தது. ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே சாதியப் பிரச்சினையுடன் வர்க்க அடிமைத்தனத்தையும் ஒழிக்க, பண்ணை ஆதிக்கத்துக்கு எதிராக களத்தில் இறங்கிப் போராடியது பெரியாரால் தொடங்கப்பட்ட ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்’. அப்படி ஒரு போராட்டத்தால் பலன் அடைந்த கிராமம்தான் இடையாற்று சதுர்வேதிமங்கலம்.

1950-கள் வரை லால்குடி சுற்றுவட்டாரம் முழுவதும் கூகூர் பரமசிவம்பிள்ளை, தாத்தாச்சாரியார், மணக்கால் பாப்பாத்தி அம்மாள், கொண்டையம்பட்டி செட்டியார் என விரல் விட்டு எண்ணக்கூடிய சில பண்ணையார்களிடம்தான் இருந்தன. அதில் கொள்ளிடக்கரையில் உள்ள ஒரு சிறிய கிராமம் இடையாற்று சதுர்வேதிமங்கலம். மொத்த ஊரும் நடேச ஐயர் வசம். அதனால்தான் அப்பகுதியில் முதன்முதலில் மின்சார வசதி பெற்ற கிராமமும் கூட.

அங்குள்ள பெரியவர் சீலி பகுதியைச் சேர்ந்த, இன்ஸ்பெக்டர் என மக்களால் அழைக்கப்பட்ட ஒருவர் ‘விடுதலை’ பத்திரிகை அவர்களின் சுயமரியாதைச் சிந்தனையைத் தட்டியெழுப்பியது. அதன் விளைவாய், ஊரே கருப்புச் சட்டைக்கு மாறியது. திருவிழாக்கள் நின்றன. சதுர்வேதி அழிந்து இடையாற்றுமங்கலமானது. பின்னர், 1952-இல் தேவசகாயம், ராயப்பன், சந்தானம், சாமிக்கண்ணு போன்றோர் அப்பகுதியில், ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்க’த்தைத் தொடங்கினர்.

‘நிலம் என் உரிமை’ என்ற முழக்கம் ஓங்கி ஒலித்தது. வயலில் இறங்க மறுத்தனர் ஊர்மக்கள். பொறுமை தாங்காத நடேச ஐயர், அடியாட்களுடன் சென்று, தேவசகாயத்தின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தினார். ஆனால், பண்ணையின் அடாவடிக்கு மக்கள் அஞ்சவில்லை. காவல்துறை துணையோடு பண்ணை ஆட்களே வயலில் இறங்கி வேலை பார்த்தனர். காவல்துறையும் ஒரு கட்டத்தில் கை விரித்துவிட, பண்ணை ஆட்கள் சரணடைந்தனர். ஊரை விட்டு வெளியேறினர். 2,000 ஏக்கருக்கு அதிகமான நிலம் ஜாதிப் பாகுபாடு இல்லாமல் அனைத்துக் கூலிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் பங்கிடப்பட்டது. ஊராட்சி மன்றத் தலைவராக சுழற்சிமுறையில் எல்லா சமூகங்களுக்கும் வாய்ப்பு கிடைத்தன.

ஆறேழு முறை இடையாற்றுமங்கலத்திற்கு சென்ற பெரியாரின் நினைவாக, லால்குடியில் திருமண மண்டபம், புரட்சிக்கவிஞர் திருமண மாளிகை ஆகியவை உள்ளன. இன்றும் திராவிடர் கழகம் உயிர்ப்போடு இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் ஆணிவேராக இருந்த முத்துசெழியன், கடந்த ஆண்டு டிசம்பரில் மறைந்தார். இடையாற்றுமங்கலத்தில் இருந்து மட்டும், சட்ட எரிப்புப் போராட்டத்தில் 27 பேர் பங்கேற்று சிறைக்குச் சென்றனர். அவர்களில் உயிரோடு இருப்போருக்கு, தேவசகாயத்தின் மகன் வால்டேர் இன்றும் உதவித்தொகை வழங்கிக் கொண்டிருக்கிறார். இன்றும் இடையாற்றுமங்கல மக்களின் உள்ளத்துடன் பெரியார் ஒன்றியிருக்கிறார்.

ஆனால், இடையாற்றுமங்கலத்துடன் முடிந்துவிடக்கூடியது அல்ல இந்த வரலாறு. அன்றைக்கு லால்குடி முழுவதும் திராவிடர் கழகம், திராவிட விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தை இயக்கிக்கொண்டிருந்த குடந்தை ஜோசப்பை நோக்கியும் நீள்கிறது, இந்த வரலாறு.

## ஜாதி மறுப்பு இணையேற்பு விழா!




திராவிடர் விடுதலைக் கழகத்தின் சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன் மகன் கி.பிரபாகரன், ஆனைமலை ஒன்றியச் செயலாளர் நடராஜ் மகள் ந.கஸ்தூரி ஆகியோரின் ஜாதி மறுப்பு வாழ்க்கை இணை யேற்பு விழா ஆனைமலை பரிமளா சுப்பிரமணியம் திருமண மண்டபத்தில் 11.06.2025 புதன் காலை 11.00 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

இணையர்கள் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து ஜாதி ஒழிப்பு உறுதி மொழியை ஏற்று தாங்களும் மலர் மாலையை மாற்றிக் கொண்டனர். பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் துரை.தாமோதரன் மந்திரமா? தந்திரமா? நிகழ்வு நடைபெற்றது. நிமிர்வு கலைக் குழுவினரின் பறை இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. யாழ்.வெள்ளிங்கிரி வரவேற்புரை நிகழ்த்தினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் இணையேற்பினை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், வேலூர் மாவட்டச் செயலாளர் சிவா, சேலம் மாவட்ட இலக்கிய அணித் தலைவர் கோனூர் வைரமணி, சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நங்கவள்ளி ஒன்றிய துணைச் செயலாளர் கிருஷ்ணன், திராவிடர் கழகத் மாரிமுத்து, திராவிட இயக்கத் தமிழர் பேரவை சண்முகவேல் பிரபாகரன், சட்ட எரிப்புப் போராளி ஆறுமுகம் அய்யா, வழக்கறிஞர் இரண்யா, வழக்கறிஞர் சேதுபதி, பிரியா மனோகரன் வி.சி.க ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வில் கழகத்தின் மாநில, மாவட்ட பொறுப்பாளர்கள், தோழமை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் திரளாக பங்கேற்றனர். புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதி ரூ.2000 வழங்கப்பட்டது.

மணமக்களின் பெற்றோர்கள் திராவிடர் விடுதலை கழகத்தைச் சார்ந்த இரண்டு குடும்பங்களும் இணைந்து பேசி இந்த ஜாதி மறுப்பு திருமணம் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொள்ளாச்சியில் கழகப் பொதுக்கூட்டம்!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக குடிஅரசு மற்றும் சுயமரியாதைஇயக்க நூற்றாண்டு பொதுக்கூட்டம் 10.06.2026 செவ்வாய்கிழமை மாலை 5 மணிக்கு ஆனைமலை முக்கோணம் பகுதியில் வே.அரிதாசு தலைமையில் நடைபெற்றது. யாழ் வெள்ளிங்கிரி வரவேற்புரை ஆற்றினார். கோவன் கலைக்குழுவின் சார்பாக கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

கலைச்செல்வி சாந்தலிங்ககுமார் பேரூராட்சி தலைவர், ஆசிரியர் சிவகாமி (தலைவர், தமிழ்நாடுஅறிவியல் மன்றம்), இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழக தலைவர் கொளத்தூர் மணி, காசு.நாகராசன் (திராவிட இயக்கத்தமிழர் பேரவை) சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் தினேசு குமார் கழகத்தில் தன்னை கழகத்தில் இணைத்து கொண்டார். தோழருக்கு கழகத் தலைவர் புத்தகம் வழங்கினார். 15 பேர் உடற் கொடை வழங்க முன்வந்துள்ளனர். இதற்கான சான்றிதழை தோழர் அறக்கட்டளைத் தலைவர். சாந்தகுமார் மற்றும் கழக தலைவர் கொளத்தூர் மணி வழங்கினர்.




தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் அருண், பொள்ளாச்சி கழக தோழர்கள் மற்றும் தோழமை அமைப்பு தோழர்களும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். ரூபா அவர்கள் நன்றியுரையாற்றினார்.

## சென்னையில் பாலஸ்தீன ஆதரவுப் பேரணி!



பாலஸ்தீன ஆதரவுக் குழு நடத்திய பாலஸ்தீன விடுதலைப் பேரணி 21.06.25 அன்று எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் தொடங்கி எழும்பூர் ரவுண்டானா அருகில் நிறைவு கண்டனக் கூட்டமாக நிறைவடைந்தது. கண்டனக் கூட்டத்தில் குழந்தைகளைத் திட்டமிட்டு கொன்றுகுவிக்கும் இஸ்ரேல்! காசா மீதான இனஅழிப்புப் போரை நிறுத்தக்கோரி திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி அவர்கள் உரையாற்றினார்.

பேரணியில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் , மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், வடசென்னை மாவட்டத் தலைவர் ராஜேந்திரன், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் அருண், மாணவர் கழக அமைப்பாளர் பேரன்பு, தட்சணாமூர்த்தி, ஏசு குமார், தினகரன் மற்றும் கழக தோழர்கள் 20-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## கோவையில் கலைஞர் பிறந்தநாள் விழா!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மாநகரச் செயலாளர் வெங்கடேசன் தலைமையில் சிவானந்தா காலனி பேருந்து நிறுத்தம் அருகில் கலைஞர் பிறந்த நாள் கூட்டம் நடைப்பெற்றது.

திவிக தலைமை செயற்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், சிவானந்தா காலனி திமுக பகுதிச் செயலாளர் டெம்போ சிவா, தமிழ்ப்புலிகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் இராமச்சந்திரன், கோவை குமார், விசிக மாவட்ட செய்தி அமைப்பாளர் கோவை ராசா, திமுக முனீர் அகமது, திக தோழர் ராஜா, திவிக மாநகரத் தலைவர் நிர்மல், சதீஷ், மாதவன், ஸ்டாலின் ராஜா கதிரவன் மற்றும் தோழமை கட்சி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## முழக்கத்திற்கு பாராட்டு!

கொளத்தூரில் நடைபெற்ற நாத்திகர் விழா நிகழ்ச்சியில் மாநாட்டில் மூன்றாவது தீர்மானமாக கணவன் இறந்த பிறகு பெண்களுக்கு நடக்கும் சடங்குகளின் தடுக்க கோரி மூடநம்பிக்கைகளில் இது கொடூரமான மூடநம்பிக்கை என்பதை சுட்டிக்காட்டி தீர்மானம் இருப்பது நெஞ்சை நெகிழ வைக்கிறது, படிக்கிற போது நா தழுதழுக்கிறது.

அதேபோல கடந்த வாரம் வந்த முழக்கத்தில் ‘நாத்திகர் விழா சிந்தனை இரண்டு தொகுப்பில்’ 1967 மே 24 விடயபுரத்தில் நடந்த பயிற்சி வகுப்பு கடவுள் மறுப்பு வாசகங்களை பெரியார் உருவாக்கினார். அதற்கு கீழே இருக்கிற கட்டுரையில் ஆசிரியர் ஊசி ஒன்று எனக்கு வேண்டும் மாணவர்கள் வாங்கி வர வேண்டும் என்று சொல்லி ஒரு மாணவர் கிளம்ப எல்லோருமாக சேர்ந்து வாங்கி வருகிறோம் என்று, உடன் இருந்த மாணவர்களும் உடன் செல்ல அவர்கள் வாங்கி வந்த விதமும் அந்த ஊசியின் கதையும், தெருவில் இழுத்து வருகிற தேரின் கதையையும் எளிமையாக புரிய வைத்த பெரியார் பேருரையாளர் பேராசிரியர் நா ராமநாதன் அவர்களின் பெரியார் இயல் பாடங்கள் தொகுதி ஒன்றிலிருந்து பெரியார் முழக்கத்தில் வெளியிட்டிருப்பது சிறப்பு படிப்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது கட்டுரையை வெளியிட்டதற்கு ஆசிரியருக்கு நன்றி.

– சாமிநாதன்
(நாமக்கல் மாவட்டத் தலைவர்).

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 27, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran